சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண்.75/2021

DW1 சங்கீதா 03.02.2026

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி ராஜமாணிக்கம் எங்களின் குடும்ப நண்பர் என்று சொன்னால் சரியல்ல, பிரதிவாதிகளின் குடும்ப நண்பர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் இறந்து போன முருகானந்தத்திறகும் 1993 ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். 2009 லிருந்து எனக்கும் எனது கணவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல. 2012 லிருந்து நானும் எனது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்று சொன்னால் அது சரியல்ல. நான் 2014 ல் எனது கணவர் மீது காவல் துறையிலும், முதல்வர் தனிப்பிரிவிற்கும் தகவல் அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிராம்சரி நோட்டில் கண்ட என்னுடைய கணவரின் கையெழுத்தா என்றால் இல்லை. எனது கணவர் விவாகரத்து கோரி கோவை மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்தது என்றால் சரிதான், அவர் இறந்த காரணத்தினால் அந்த வழக்கு தள்ளுபடி ஆனது என சொன்னால் அது சரியல்ல. எனது கணவர் இறந்த பிறகு அவரது தாயார் பாக வழக்கு சமூக நீதிமன்றத்தில் அவ எண்.160/2021 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் இறந்துவிட்ட காரணத்தினால் பிரதிவாதிகள் மூவருக்கும் சொத்துக்கள் எனது கணவர் மூலம் கிடைத்துள்ள

காரணத்தினால் தான் வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். நான் சொத்துக்கள் மீது வில்லங்கம் ஏற்படுத்துவதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல வாதி பொய்யாக பிராம்சரி நோட்டை உற்பத்தி செய்துள்ளார் என்று நான் சொல்வது பொய் என்றால் அது சரியல்ல. கடந்த 28.10.2018 அன்று எனது கணவர் ரூ 5 லட்சத்தை பெற்றுக் கொண்டு தான் தாவா பிராம்சரி நோட் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் எனது கணவர் இறுதியாக 2 ½ லட்சம் வாங்கி வந்தார் என்றும் அதனால் அவருக்கு பிராம்சரி நோட்டின் படி கடன் வாங்க அவசியம் இல்லை. எனது கணவர் பிராம்சரி நோட் எழுதி கொடுத்த காரணத்தினால் வாரிசுகள் என்ற அடிப்படையில் நாங்கள் தாவா தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி